# தாலாட்டுப் பாடல்களில் இசை

**திருமதி. கிருபாசக்தி கருணா,**
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

## ஆய்வு நோக்கம்

இசை அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்க்கையிலும் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. இவ்விசை ஒரு முக்கியமான பகுதியாக அனைத்து விழாக்களிலும் இறைவழிபாட்டிலும், விளையாட்டு சம்பந்தப்பட்ட நிகழ்வுகளிலும் மற்றும் அரசியல் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளிலும் தவிர்க்க முடியாத ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. பெரும்பாலான மக்கள் தங்கள் வாழ்நாளில் ஒரு குறிப்பிட்ட காலத்தை இசையை இரசிப்பதற்கு தினந்தோறும் செலவிடுகின்றனர்.

கல்வி, சமூகவியல், மருத்துவம் இவற்றை உளவுயல் ரீதியாக ஆராயக்கூடிய ஆராய்ச்சியாளர்களுக்கு இசை மிகவும் உறுதுணையாக அமைகிறது. இசைக் கலைஞர்கள், இசை அறிவியலாளர்கள், அதனைக் கற்பிப்பவர்கள், கற்றுக்கொள்பவர்கள் அனைவரையும் இசை தன்வயப்படுத்துகிறது. இசை உளவியல் கடந்த முப்பது வருடங்களாக அதிகமாகப் பேசப்படும் ஒரு பாடமாக இருந்து வருகிறது. இவ்வித இசை உளவியல் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கெல்லாம் அடிப்படையாக இருப்பது ஒரு சாதாரண மனிதனின் வாழ்க்கை முறை. மனிதனுடைய ஒவ்வொரு வாழ்க்கைப்படி நிலைகளிலும் இசை இணைந்துள்ளது. அவன் விரும்பியோ, விரும்பாமலோ இசை அவனின் வாழ்க்கை முறையுடன் இரண்டறக் கலந்துவிட்டது. மனித வாழ்க்கையின் தொடக்கமான குழந்தைப் பருவத்தில் தாலாட்டுப் பாடல்களில் இசை எவ்வாறு ஒரு குழந்தையைத் தன்வயப்படுத்துகிறது என்பது இச்சிறிய ஆய்வுக் கட்டுரையின் மூலம் உணர்த்தப்படுகிறது.

## தாலாட்டுப்பாடல்களில் இசை

குழந்தை பிறந்தவுடன் அதனால் செய்யக்கூடிய முக்கிய தொழில் அழுகை. குழந்தை பசிக்கு அழுகின்றது. சுகவீனத்திற்கு அழுகின்றது. தாயின் அரவணைப்பிற்கு அழுகின்றது. நித்திரைக்கு அழுகின்றது. பயத்திலே

அழுகின்றது. இவ்வாறு பல தேவைகளுக்கும் அழுகின்ற குழந்தையைத் தாயானவள் சமாதானப்படுத்தவதற்குத் தாலாட்டுப்பாடுகின்றாள். குறிப்பாகக் குழந்தை தூங்குவதற்குத் தாலாட்டை உபயோகிக்கின்றாள, தாயினுடைய வாயிலிருந்து வரக்கூடிய குறிக்கப்பட்ட ஒலிவடிவங்கள் அந்தக் குழந்தையின் செவியில் புகுந்து குழந்தையை அமைதியடையச் செய்கின்றது. எனவே, குழந்தை ரசிக்கின்றது. அந்த ரசனையின் காரணமாகக் குழந்தை தன்னுடைய அழுகையை மறக்கின்றது. இந்த வகையில் மனிதனுடைய குழந்தைப் பருவத்திலே இசையானது உளவியல் ரீதியாக முதல் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

## தாலாட்டு – விளக்கம்

தாயின் நாவசைவில் தாலாட்டு பிறக்கின்றது. தாலாட்டு என்ற சொல்லை 'தால்' ஆட்டு எனப் பிரிக்கலாம். தால் என்றால் நாக்கு என்றும், நாவை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு என்றும் பெயர் பெற்றிருக்கலாம்.[1] 'தாலாட்டு' எனும் சொல் ராராட்டு, தாராட்டு, தாலேலோ, ரோராட்டு, ஓராட்டு, தொட்டில் பாட்டு, ஓலாட்டு, திருத்தாலாட்டு எனும் பல்வேறு பெயர்களால் இன்றைய உலக வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழில் தாலாட்டு என்று கூறுவதுபோல், மலையாளத்தில் "தாராட்டு" என்றும், தெலுங்கில் "ஊஞ்சோதி" என்றும், கன்னடத்தில் "ஜோகுல" என்றும் அழைக்கப்படுகிறது.[2]

## இலக்கியங்களில் தாலாட்டு

இடைக்கால இலக்கியங்களில் தாலாட்டுப் பாடல்களைக் கருவாகக் கொண்டு எழுந்தவற்றை "தாராட்டு" என்றும், பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் தாலேலோ என்றும் குறிப்பிடுகின்றன. தமிழ் மொழியில் முதன்முதலாகத் தாலாட்டுப் பாடியவர் பெரியாழ்வார் ஆவார்.

பெரியாழ்வார் கண்ணனைத் தொட்டிலிலிட்டு,

*"மாணிக்கம் கட்டி வயிரம் இடைகட்டி*
*ஆணிப் பொன்னால் செய்த வண்ணச்சிறுதொட்டில்*
*பேணி யுனக்குப் பிரமன் வீடு தந்தான்*
*மாணிக் குறளனே தாலேலோ*
*வையம் அளந்தானே தாலேலோ"*[3]

எனத் தாலாட்டுகிறார். இப்பாடல் நீலாம்பரி இராகம், ஆதி தாளத்தில் பாடப்பட்டு வருகிறது. பெரியாழ்வாரைத் தொடர்ந்து குலசேகர ஆழ்வாரும் இராமனைக் குழந்தையாகப் பாவித்துத் தாலாட்டுப் பாடல் பாடியுள்ளார்.

"தாமரை மேல் அயனவனைப் படைத்தவனே தசரதன் தன்
மாமதலாய் மைதிலி தன் மணவாளா வண்டினங்கள்
காமரங்களிசை பாடும் கணபுரத்தென் கருமணியே
ஏமருவும் சிலை வலவா இராகவனே தாலேலோ"[4]

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கீர்த்தனைகள் இயற்றித் தமிழிசையை வளப்படுத்தியவர்களுள் பாபநாசம் சிவன் குறிப்பிடத்தக்கவர். இவர் தனது கீர்த்தனைகளில் சீராட்டுதல் என்ற சொல்லாட்சியைத் தாலாட்டுதல் என்ற பொருள் தருவதாக இயற்றியுள்ளார்.

"ஈரேழு புவனங்கள் படைத்தவனை - கையில்
ஏந்திச் சீராட்டி பாலூட்டித் தாலாட்ட நீ"[5]
(என்ன தவம் செய்தனை)

இந்த இலக்கியத் தாலாட்டுகளுக்கெல்லாம், ஒரு அஸ்திவாரமாக அமைந்தது நாட்டுப்புற வழக்கிலுள்ள தாலாட்டுக்களே ஆதும். வாய்மொழி இலக்கியங்களிலிருந்து எழுத்திலக்கியம் தோன்றியதுபோல நாட்டுப்புற இசையின் வளர்ச்சியே செம்மைப்படுத்தப்பட்ட இசையாகும். (Classical Music). மனித வாழ்க்கை முறையுடன் ஒன்றி, உண்மையானதாகவும், இயல்பானதாகவும் வழங்கிவரும் பாடல்கள் இந்நாட்டுப் பாட்ல்களாகும். உழைப்போடும் வாழ்நிலையோடும் உணர்வோடும் நெருக்கமான உணர்வைக் கொண்டிருப்பது நாட்டுப்புறஇசை. இந்த வகையில் நாட்டார் வழக்கிலுள்ள சில தாலாட்டுப் பாடல்களையும் அதன் இசை முறைமையயும் பற்றி இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

நாட்டுப்புறப் பாடல்கள் ஒரு வரையறைக்குட்பட்டதல்ல எனும் பேச்சை மறுக்கும் அளவிற்கு இன்ற நாட்டுப்புறவியல் ஆய்வுகள் மேம்பட்ட நிற்கின்றன. "நாட்டுப்புற இசையில் அசையோ, வரியோ முக்கியமல்ல என்பதைவிட அது பாடும்போது ஒலிக்கும் ஒலிப்பு முறையைப் பொறத்தது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். அதற்காக இசை வகையோ வகைப்படுத்தும் முறையோ இல்லை என்று கண்ணை மூடிக்கொண்டு சொல்வது தவறு"[6] என்று கே.ஏ. ஜோதிராணி அவர்கள் தன்நூலில் குறிப்பிட்டுள்ளது சிந்தனைக்குரியது.

நாட்டுப்புறப் பாடல்களுக்கு மெட்டுகள் உள்ளன என்றும், அவற்றை ஒவ்வொரு பாடல் வகைக்கும் வகைப்படுத்திக் கூறியுள்ள செ. அன்னகாமு அவர்களின் கருத்துக்கள் "நாட்டுப்புற இயல் ஆய்வு" என்ற டாக்டர் சு.சக்திவேல் அவர்களின் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றில் தாலாட்டுப் பாடலுக்குரிய மெட்டு பின்வருமாறு,

"ஆராரோ ஆரிரரோ
ராராரோ ராரிரரோ
ரூரிரோ ரூரிரோ
ரீரீ ரீரீ ரீ ரீ........"[7]

தாலாட்டின் பாடற்பொருளை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. குழந்தையைப் பற்றியன

2. குழந்தைக்குரிய கருவிகள் பற்றியள

3. குழந்தைகளின் உறவினர்கள் பற்றியன

எடுத்துக்காட்டு

1. பிள்ளை இல்லாத ஒரு தாய் பிள்ளைச் செல்வத்திற்காக ஏங்கும் ஒரு பாடல்.

"கிண்ணியிலே போட்ட சோற்றைக்
கீறித் தின்னப் பிள்ளை இல்லை
ஊருக்குப் போகையிலே
உடன் வரப்பிள்ளை இல்லை
பூக்கிற காலத்திலே
பூமாறிப் போனேனே
காய்க்கிற காலத்திலே
காய்மாறிப் போனேனே"[8]

2. ஒரு தாய் மகப்பேற்றை விரும்பித் தான் செய்த தான தருமங்களைத் தாலாட்டின்போது எடுத்துரைப்பதாக ஒரு பாடல்.

"எட்டாத கோவிலுக்கு
எட்டு விளக்கேற்றி
தூரத்துக் கோவிலுக்கு
தூண்டா விளக்கேற்றி
சோதி பரசேதிகளுக்கு
தூமடமும் கட்டிவைத்து
நல்ல தண்ணீர்க் கிணறுகளும் கட்டிவைத்து" [9]

3. தன் பிள்ளையின் அழகை வர்ணிப்பதாக ஒரு பாடல்

"வாசலிலே வன்னிமரம் நல்ல கண்ணே
வழசங்க ராஜகுலம்
ஏ ராஜகுலம் பெத்தெடுத்த நல்ல கண்ணே நீ
இரத்தினமே கண்ணாறு
வெள்ளி கொடி முடிஞ்சு நல்ல கண்ணேநீ

*வெத்திலை போல் நீ பொறந்தே*
*ஏ வெள்ளி கொடி அழகே நல்ல கண்ணே நீ*
*செல்லக்கிளி கண்ணுறங்கு*
*ராரி ராரோ"*[10]

4. வரம்பெற்றுப் பிறந்த குழந்தையைத் தாய் வர்ணிப்பதாக ஒரு பாடல்

*"மாசிப் பிறையோ நீ வைகாசி மாங்கனியோ*
*தேசப் பிறையோ நீ தெவிட்டாத மாங்கனியோ*
*எங்கள் குலம் மங்காமல் எதிர்குலத்தார் ஏசாமல்*
*தங்கமலி பொக்கிசத்தைத் தானாள வந்த கண்ணா"*

5. தாலாட்டுப் பொருண்மைகளுள் தாய்மாமன் பெருமை பேசுவது சிறப்புடையது. மாமன் என்னென்ன வாங்கி வருவாரென ஒரு ஏழைத்தாய் இயல்புடன் பாடுவதாக ஒரு பாடல்

*"ஆரிராரோ ஆராரோ*
*எங்கள் தம்பிய*
*என் ராசன் பெத்த*
*ரவிமணி கண்ணே - உனக்கு*
*செண்டு பாட்டிலே*
*சோப்பு புட்டிய*
*சாராய பாட்ல*
*ஓமம் பொடிய*
*ஓரணாக் காசிய*
*வாங்கிய வருவாரே உன் மாமன்"*[12]

**இசை அமைப்பு**

நாட்டுப்புற வழக்கில் தாலாட்டுப் பாடல்கள் தனியிடம் பெறுகின்றன. இப்பாடல்கள் மிக எளிமையான மெட்டில், தொட்டில் ஆடும் லயத்திற்கேற்ப இனிமையாகப் பாடுவதால் அது குழந்தையின் உறக்கத்திற்கேற்ற இசையாகிறது.

தாலாட்டு நீலாம்பரி இராகத்தில் பாடும் வழக்கம் நீண்டகாலமாகத் தொடர்ந்து வருகிறது. இலக்கியங்களிலும் தாலாட்டுப் பாடல்களுக்கு நீலாம்பரி இராகம் கொடுக்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் எஸ்.இராமநாதன் அவர்களால் நாலாயிர திவ்விய பிரபந்தத் திருத்தாலாட்டுகள் நீலாம்பரி இராகத்தில் இசையமைக்கப்பட்டு சுரதாளக் குறிப்புடன் "திவ்விய பிரபந்தப் பண் இசை" என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது. தேவதானம் என்ற நூலில் ஸ்ரீராமபாரதி அவர்கள் இத்திருத்தாலாட்டுகளை நீலாம்பரி இராகத்தில் இசையமைத்து வெளியிட்டுள்ளார்.

நீலாம்பரி இராகம் தவிர குறிஞ்சி, ஆனந்தபைரவி, சகானா, யதுகுலகாம்போதி, சாருகேசி, செஞ்சுருட்டி, சிந்துபைரவி, நாதநாமக்கிரியை, புன்னாகவராளி போன்ற இராகங்களிலும் பல தாலாட்டுப் பாடல்களின் இசை அமைந்துள்ளது. சான்று : பெரியாழ்வார் திருத்தாலாட்டினைப் பம்பாய் சகோதரிகள் குறிஞ்சி இராகத்தில் பாடியுள்ளனர்.

தலாட்டை அடிப்படையாக வைத்துப் பிற்காலத்தில் குமரகுருபவர், பாரதிதாசன், கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை, நாமக்கல் கவிஞர், கண்ணதாசன் போன்றோர் தாலாட்டுப் பாடல்கள் பாடியுள்ளனர். சிற்றிலக்கிய நூல்களான பிள்ளைத் தமிழில் தாலாட்டு என்பது தனிப்பருவமாகக் கொண்டு பாடல்கள் பாடப்பட்டுள்ளன.

## முடிவுரை

மனித வாழ்க்கையிலே அவனுடைய பிறப்பு முதல் இறப்பு வரை அன்றாடம் செயல்படும் ஒவ்வொரு செயலிலும் இசையை இணைத்துக் கொள்வதால், உள்ளத்திற்கு உற்சாகத்தையும், இன்பத்தையும், உடலுக்குத்தெம்பையும் பெறுகிறான். இந்த இசையிலே மனித வாழ்க்கை வட்டத்தின் தொடக்கமான குழந்தைப் பருவத்தில் இசை வகையிலே மனித வாழ்க்கை வட்டத்தின் தொடக்கமான குழந்தை பருவத்தில் இசை சிறப்பிடம் பெறுகின்றது. இலக்கிய வழக்கிலும் நாட்டுப்புற வழக்கிலும் இவ்விசை தாலாட்டு இசையாகக் குழந்தைகளை உணர்ச்சிகளின் அடிப்படை தன்வயப்படுத்துகிறது.

## அடிக்குறிப்புகள்

1. டாக்டர் சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.27
2. மேலது, ப.27
3. கி.வேங்கடசாமி நாட்டார், ஸ்ரீநாலாயிர திவ்விய பிரபந்தம், ப. 11
4. மேலது ப.190
5. டாக்டர் ருக்மணி ரமணி, பாபநாசம் சிவன் கீர்த்தனை மாலை, 3ம்பாகம், ப.207
6. கே.ஏ.ஜோதிராணி, சடங்குப் பாடல்கள், ப.IV (முன்னுரை)
7. டாக்டர் சு.சக்திவேல், மு.கூ.நூ.ப.130
8. மேலது, ப.29
9. மேலது, ப.29
10. கே.ஏ.ஜோதிராணி, மு.கூ.நூ.ப.65